17 05 2012 6 45 வியாழக்கிழமை காலை

## தலைப்புச் செய்திகள்

1. தமிழக மக்களின் முன்னேற்றத்திற்கும், மாநிலத்தின் உரிமையை நிலைநாட்டவும் அரசு எடுக்கும் முயற்சிகளுக்கு அனைத்து கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டுமென்று முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா கேட்டுக் கொண்டுள்ளார்.

2. லோக்பால் மசோதாவை மாநிலங்களவையில் நிறைவேற்றுவதற்கான முயற்சியில் அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளது என்று பிரதமர் அலுவலக இணையமைச்சர் திரு வி நாராயணசாமி கூறியிருக்கிறார்.

3. நிலம் கையகப்படுத்துதல் தொடர்பாக கடுமையான விதிமுறைகளை ஊரக வளர்ச்சி துறைக்கான நாடாளுமன்ற நிலைக்குழு அரசுக்கு பரிந்துரைத்துள்ளது.

4. ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் நேற்று மும்பை இண்டியன்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 32 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

## இனி விரிவான செய்திகள்

தமிழக மக்களின் முன்னேற்றத்திற்கும், தமிழகத்தின் உரிமையை நிலைநாட்டவும் அரசு எடுக்கும் முயற்சிகளுக்கு அனைத்து கட்சிகளும் அரசியலுக்கு அப்பாற்பட்டு ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமென்று முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அஇஅதிமுக ஆட்சி பொறுப்பேற்று ஓராண்டு நிறைவுற்றதையொட்டி சட்டப்பேரவையில் நேற்று பல்வேறு கட்சிகளின் தலைவர்களும், அமைச்சர்களும். பேரவைத் தலைவரும் வாழ்த்தி பேசினார்கள்.

பின்னர் ஏற்புரை ஆற்றிய செல்வி ஜெயலலிதா, அஇஅதிமுக ஓராண்டிலேயே பல குறிப்பிடத்தக்க சாதனைகளை நிறைவேற்றி இருப்பதாகக் குறிப்பிட்டார்.

பேரவையில் உறுப்பினர்கள் ஆக்கப்பூர்வமாக தெரிவித்த ஆலோசனைகளையும், கோரிக்கைகளையும் தமது அரசு ஏற்று செயல்படுத்தி உள்ளதாக கூறி அவற்றை பட்டியலிட்டார்.

மின் பற்றாக்குறையை போக்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளை அரசு முனைப்புடன் எடுத்து வருவதாகவும் முதலமைச்சர் தெரிவித்தார்.

பல்வேறு மசோதாக்கள் நிறைவேறிய பின்னர் சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத்தொடர் நேற்று மறுதேதி குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டது.

<><><><><>

லோக்பால் மசோதாவை மாநிலங்களவையில் நிறைவேற்றுவதிலும், இம்மசோதா குறித்து அரசியல் கட்சிகளிடையே ஒருமித்த கருத்தை உருவாக்குவதிலும் அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளது என்று பிரதமர் அலுவலக இணையமைச்சர் திரு வி நாராயணசாமி கூறியிருக்கிறார்.

நேற்று புதுதில்லியில் பிடிஐ செய்தி நிறுவனத்திற்கு அவர் அளித்துள்ள பேட்டியில், இதற்கான முயற்சிகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளன என்று கூறினார்.

மாநிலங்களவையில் காங்கிரஸ் மற்றும் அதன் கூட்டணி கட்சிகளுக்கு போதுமான உறுப்பினர்களின் ஆதரவு இல்லையென்பதால் அனைத்து அரசியல் கட்சிகளிடமும் அரசு பேச்சு நடத்தி வருகிறது என்றார்.

சில பிரச்சனைகளில் அரசுக்கும், பல்வேறு அரசியல் கட்சிகளுக்கும் கருத்து வேறுபாடுகள் உள்ளன என்றும், அதைப் போக்க தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

<><><><><>

மத்திய அரசின் உயர்கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 சதவீத இடஒதுக்கீடு வழங்கும் புதிய சட்டத்திருத்தத்திற்கு மக்களவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

கடந்த 2006-ம் ஆண்டு இயற்றப்பட்ட இந்த சட்டத்தில் சில குறைபாடுகளை களைவதற்காக புதிய சட்டத்திருத்தம் கொண்டு வரப்பட்டது.

இதுதொடர்பான விவாதத்திற்கு பதிலளித்துப்பேசிய மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு கபில்சிபல், ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மேம்பாட்டுக்கு பாடுபட மத்திய அரசு உறுதிபூண்டிருப்பதாக கூறினார்.

<><><><><>

நிலம் கையகப்படுத்துதல் தொடர்பாக கடுமையான விதிமுறைகளை நாடாளுமன்ற நிலைக்குழு அரசுக்கு பரிந்துரைத்துள்ளது.

நிலம் கையகப்படுத்துதல், மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்த்துதல் தொடர்பான மசோதா மீது ஊரக வளர்ச்சி அமைச்சகத்திற்கான நாடாளுமன்ற நிலைக்குழு சில பரிந்துரைகளை அளித்துள்ளது.

பொதுநோக்கத்திற்காக நிலங்களை கையகப்படுத்தும் போது அரசு மிகுந்த கவனத்துடன் செயல்பட வேண்டுமென்றும், அந்த நிலத்தை லாப நோக்கத்திற்காக பயன்படுத்தக் கூடாது என்றும் நிலைக்குழு தெரிவித்துள்ளது.

அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் கூட்டாக தொழிற்சாலைகள் அமைப்பதற்கு விவசாய நிலங்களை கையகப்படுத்தக் கூடாது என்ற மற்றொரு முக்கிய பரிந்துரையை நிலைக்குழு அளித்துள்ளது.

இந்த மசோதா மீது காங்கிரஸ் தலைவர் திருமதி சோனியாகாந்தி, பொதுச்செயலாளர் திரு ராகுல்காந்தி ஆகியோர் சில முக்கியமான திருத்தங்களை அளித்தனர்.

<><><><><>

ஒன்பதாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு சமூக அறிவியல், அரசியல் அறிவியல் பாடப் புத்தகங்களை மறுஆய்வு செய்ய பல்கலைக்கழக மானியக்குழு முன்னாள் தலைவர் திரு எஸ் கே தோராட் தலைமையில் புதிய குழு ஒன்றை மத்திய அரசு அமைத்துள்ளது.

தேசிய கல்வி மற்றும் ஆராய்ச்சி அமைப்பின் பாடப்புத்தகங்கள் தொடர்பாக சமீபத்தில் எழுந்த சர்ச்சையை அடுத்து இந்தக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக்குழுவில் சென்னையைச் சேர்ந்த பேராசிரியர் எம் எஸ் எஸ் பாண்டியன், இந்திராகாந்தி தேசிய திறந்தநிலை பல்கலைக்கழக பேராசிரியர் ஏ எஸ் நரங் உட்பட ஐந்து பேர் இடம் பெற்றுள்ளனர்.

<><><><><>

புதுக்கோட்டை சட்டப்பேரவை இடைத்தேர்தலில் போட்டியிடும் தேமுதிக வேட்பாளர் பெயர் அறிவிக்கப்பட்டுள்ளதால் இந்தத் தொகுதியில் போட்டி உறுதியாகியுள்ளது.

அஇஅதிமுக சார்பில் திரு கார்த்திக் தொண்டைமான் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

தேமுதிக சார்பில் திரு ஜாஹீர் உசேன் போட்டியிடுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இடைத்தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்று திமுக, மதிமுக, பாமக, இந்திய கம்யூனிஸ்ட் உள்ளிட்டகட்சிகள் முடிவு செய்துள்ள நிலையில், அஇஅதிமுக, தேமுதிக இடையே நேரடி போட்டி ஏற்பட்டுள்ளது.

காங்கிரஸ் கட்சி தனது நிலைப்பாட்டை இன்னும் அறிவிக்கவில்லை.

இந்த தொகுதியில் உறுப்பினராக இருந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் திரு முத்துக்குமார் சாலை விபத்தில் உயிரிழந்ததையடுத்து அடுத்த மாதம் 12-ம் தேதி இடைத் தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<><><><><>

ஓட்டுநர்களுக்கான தனி நலவாரியத்தை புதிதாக அஇஅதிமுக அரசு அமைக்கவில்லை என்று திமுக தலைவர் திரு மு கருணாநிதி கூறியிருக்கிறார்.

ஏற்கனவே கடந்த ஆட்சியில் தமிழ்நாடு ஆட்டோ-ரிக்ஷா மற்றும் டாக்சி ஓட்டுநர் நல வாரியம் என்று இருந்த பெயரை தமிழ்நாடு அமைப்பு சாரா ஓட்டுநர்கள் நல வாரியம் என்று தமிழக அரசு பெயர் மாற்றி அறிவித்துள்ளது என்று அவர் ஒரு அறிக்கையில் கூறியுள்ளார்.

<><><><><>

நாட்டில் தற்போது நிலவும் நெருக்கடியான பொருளாதார சூழலை கருத்தில்கொண்டு, மத்திய அரசு புதிய சிக்கன நடவடிக்கைகளை கொண்டுவர உள்ளதாக மத்திய நிதியமைச்சர் திரு பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் நேற்று நிதி மசோதா 2012 மீது நடைபெற்ற விவாதத்தை முடித்துவைத்துப் பேசிய நிதியமைச்சர், பிரச்சனைகளை சமாளிக்க சிக்கன நடவடிக்கைகள் அவசியம் என்றபோதிலும், அதிக அளவு பாதிப்பை ஏற்படுத்தாக வகையில், இவை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

2011-2012-ஆம் ஆண்டிற்கு முன்பு எட்டு புள்ளி நான்கு சதவீத அளவை எட்டியிருந்த நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி, ஆறு புள்ளி ஒன்பது சதவிகிதமாக குறைந்துள்ளது கவலையளிக்கக்கூடிய விஷயமாக இருந்தபோதிலும், வளர்ச்சிக்கான நடவடிக்கைகள் தொடர்ந்து முடுக்கிவிடப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

முன்னதாக மக்களவையில், அமெரிக்க டாலருக்கு எதிராக இந்திய ரூபாய் மதிப்பு 67 காசு குறைந்து 54 ரூபாய் 46 காசாக குறைந்திருப்பது குறித்து உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த திரு பிரணாப் முகர்ஜி, ஐரோப்பிய யுனியன் பொருளாதார சரிவும், சர்வதேச சூழ்நிலைகளும்தான் காரணம் என்றும் இந்திய பொருளாதார வளர்ச்சிக்கு பாதிப்பு இல்லை என்றும் தெரிவித்தார்.

<><><><><>

ஈரோடு அருகே பர்கூர் மலைப்பாதையில் நேற்று மாலை நிகழ்ந்த சாலை விபத்தில் ஐந்து பேர் பலியானார்கள். 31 பேர் காயமடைந்தனர்.

அந்தியூரிலிருந்து தாளக்கரைக்கு மணல் ஏற்றிச்சென்ற வேன், பாலமலைப்பாதையில் திரும்பும்போது ஒட்டுநர் கட்டுப்பாட்டை இழந்து தலைக்குப்புற கவிழ்ந்து 15அடி பள்ளத்தில் விழுந்தது.

மணல் லாரியின் மீது அமர்ந்து பயணம் செய்த இரண்டு குழந்தைகள் உட்பட ஐந்து பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். படுகாயமடைந்துள்ளவர்களில் இருவரது உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளது.

<><><><><>

116-வது வருடாந்திர மலர்க்காட்சி உதகமண்டல அரசு தாவரவியல் பூங்காவில் நாளை துவங்குகிறது.

கோடை விழாவின் முக்கிய நிகழ்ச்சியாக கருதப்படும் இந்த மூன்றுநாள் காட்சியை மாநில வேளாண்துறை அமைச்சர் திரு தாமோதரன் துவக்கி வைக்கிறார் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி அர்ச்சனா பட்நாயக் கூறியுள்ளார்.

இந்த மலர்க்காட்சியில் டியூப்ரஸ், கிரிசாந்தமம், ஏசியாடிக், லில்லி உள்ளிட்ட 94 வகையான மலர்கள் 15 ஆயிரம் பூந்தொட்டிகளில் காட்சிக்கு வைக்கப்பட உள்ளது.

மேலும் வண்ண மலர்களால் வடிவமைக்கப்படும் தேசிய விலங்கான புலி உருவம், மாநில அரசின் விலங்கான நீலகிரி வரையாடு உருவமும் காட்சியில் இடம் பெற உள்ளது.

இந்த ஆண்டு முதன்முறையாக தாவரவியல் பூங்காவை புகலிடமாக கொண்டுள்ள பறவைகளின் கிரீச்சல் சப்தங்கள் செயற்கை முறையில் ஒலிபரப்பப்படும் என்றும், மணல் சிற்பங்கள் உட்பட பல்வேறு புதிய நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் திருமதி அர்ச்சனா பட்நாயக் மேலும் தெரிவித்தார்.

<><><><><>

எயிட்ஸ் குறித்து விழிப்புணர்வு ஏற்படுவதற்காக நாடு முழுவதும் பயணித்து வரும் ரெட் ரிப்பன் எக்ஸ்பிரஸ் கண்காட்சி ரயிலை கரூர் ரயில் நிலையத்தில் கடந்த இரண்டு நாட்களாக 85 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பார்வையிட்டனர்.

இந்த கண்காட்சி எயிட்ஸ் நோய் குறித்த தகவல்களை அறிந்து கொள்வதற்கு மிகுந்த பயனளிப்பதாக இருந்தது என்று அதனை பார்வையிட்டவர்கள் தெரிவித்தனர்.

( சவுண்ட் பைட் - மோகன் - 35 செகண்ட்ஸ் )

*(என் பேர் மோகன்கங்க, கரூர்ல இருந்து பேசறேன். ரெட்ரிப்பன் ரயில் வந்துச்ச நேத்து. நிறைய மக்கள் வந்து கிராமத்திலே இருந்து கரூரை சுத்தியிருக்கிற எல்லா ஏரியாலே இருந்தும் நிறைய பொது மக்கள் எல்லாருமே வந்தாங்க. அதேமாதிரி ஸ்கூல் சில்ட்ரன் நிறையபேர் வந்து பார்த்தாங்க. கரூர்ல வந்து வெயில் ரொம்ப கடுமையா இருக்கு. அதையும் பொருட்படுத்தாம நிறையபேர் வந்து வரிசையில நின்னு பார்த்தாங்க. அது ரொம்ப யூஸ்புல்லா இருந்தது. ரெட்ரிப்பன் ரயினுக்குல்ல பார்த்தீங்கன்னா எய்ட்ஸ் பத்தின விழிப்புணர்ச்சி ஏற்படுத்தக்கூடிய தகவல்கள் நிறைய இருந்துச்சு. அதுவந்து சாதாரணமா பாமர மக்களுக்கு புரிய மாதிரி இருந்துச்சு. எல்லாருக்கும் அந்த விஷயத்த பத்தி தெரிந்துக்கற மாதிரியும், பயனுள்ளதாகவும் இருந்துச்சு.)*

இந்த ரயில் கரூரில் இருந்து புறப்பட்டு ராமநாதபுரம் செல்கிறது.

<><><><><>

இருவரிச் செய்திகள்

ஏர் இண்டியா நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருப்பதாக வேலை நிறுத்தம் செய்து வரும் இந்திய விமானிகள் சங்கமான ஐ பி ஜி தெரிவித்துள்ளது.

<><><><><>

பெண்களுக்கு எதிரான வன்முறைகளை கட்டுப்படுத்துவதற்கும் அதை தடுப்பதற்கும் மத்திய அரசு உயர் முன்னுரிமை கொடுத்து வருவதாக உள்துறை இணையமைச்சர் திரு ஜித்தேந்திர சிங் மக்களவையில் எழுத்து மூலம் அளித்த பதிலில் தெரிவித்துள்ளார்.

<><><><><>

சுரங்கம் முறைகேடு தொடர்பாக கர்நாடக முன்னாள் முதலமைச்சர் திரு பி எஸ் எடியூரப்பா மற்றும் அவரது உறவினர்களின் வீடுகளில் நேற்று சிபிஐ அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

<><><><><>

பூம்புகார் சார்பில் நேற்று ஆழ்வார்பேட்டையில் தொடங்கிய குழந்தைகளுக்கான கைத்தறி மற்றும் கைத்திறன் பொருட்கள் கண்காட்சி வரும் 29 ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

<><><><><>

கோவில் தேரோட்டத்தின் போது ஏற்படும் விபத்துகளைத் தடுக்க பொது மக்களும், கோவில் நிர்வாகிகளும் ஒத்துழைக்க வேண்டுமென்று தமிழ்நாடு மின்சார வாரியம் கேட்டுக் கொண்டுள்ளது.

<><><><><>

இலங்கையைச் சேர்ந்த நபர் ஒருவரை தமிழக காவல் துறையினர் நேற்று ராமேஸ்வரம் அருகே திருப்பாளை என்ற இடத்தில் கைது செய்தனர். அவரிடமிருந்து சில நாடுகளுக்கு செல்வதற்கான போலி பாஸ்போர்ட்டுகள் பறிமுதல்செய்யப்பட்டன.

<><><><><>

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் நேற்று மும்பை இன்டியன்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 32 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

முதலில் விளையாடிய கொல்கத்தா அணி, இருபது ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 140 ரன் எடுத்தது.

141 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய மும்பை அணி, 19 புள்ளி ஒரு ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 108 ரன்களே எடுத்தது.